பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 3 (15—2—68) வியாழன் ★ வெளியூர்: மாசி 4 (16—2—68) வெள்ளி [இதழ்: 203

கூலி நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை

காங்கிரசு உறுப்பினர் கூற்று—அமைச்சர் மறுப்பு

சென்னை, பிப். 14—

"திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் விவசாயத் தொழிலாளர்கள், தங்களுடைய அறுப்புக் கூலியாகப் பெற்றுத் தலையில் சுமந்து செல்லும் நெல்லை அதிகாரிகள் வழிமடக்கிக் கொள்முதலுக்குக் கொடுக்கும்படி கைப்பற்றிக்கொள்ளுவதாகவும், பிறகு விவசாயத் தொழிலாளர்கள் தாங்களாகவே அரசாங்கக் கொள்முதலுக்கு நெல்லைக் கொடுத்தார்கள் என்று சொல்லுவதும் அரசுக்குத் தெரியுமா?"

என்று என். ஆர். தியாகராசன் (காங்) சட்டமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது கேட்டார்.

இக்குற்றச்சாட்டை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் மறுத்துக் கூறியதாவது:—

"விவசாயத் தொழிலாளர்கள் என்ற போர்வையில் பக்கத்து மாவட்டத்திற்குச் சில கடத்தல் பேர்வழிகள் நெல்லைக் கடத்துகிறார்கள் என்றுதான் அரசாங்கம் விசாரித்தபோது தெரியவந்தது; அவர்களைத்தான் அதிகாரிகள் பிடித்துள்ளனர்.

"விவசாயக் கூலிகள் அரைமூட்டை வரையில் அவர்களின் கூலிக்குப் பதிலாகக் கிடைக்கும் நெல்லை எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படி அரசு ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் திட்டவட்டமாக உத்தரவு போட்டிருக்கிறது; அதைக் கடைபிடிக்கும்படி அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்."

மொரார்ஜிதேசாய்-மனோகரன் மோதல்

சிவசேனையுடன் தி. மு. கழகத்தை ஒப்பிட்டதற்கு எதிர்ப்பு

'வில்லனா'க விளங்கும் டில்லி அரசின் போக்கிற்குக் கண்டனம்

புதுடில்லி, பிப். 14—

நாடாளுமன்ற மக்களவையில் அசாம் மாநிலத் தனி நாடு கிளர்ச்சி பற்றிய தீர்மானமொன்றின்மீது விவாதம் நடைபெற்றபோது, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய்க்கும்—மக்களவை தி.மு.க. துணைத் தலைவர் திரு. கி. மனோகரனுக்கும் மோதல் ஏற்பட்டது.

அசாம் மாநிலத் தலைநகரான கௌகாத்தியில், இவ்வாண்டு குடியரசு நாளன்று நடந்த (தனி நாடு கோருவோரின்) கிளர்ச்சிகள் தொடர்பாக மத்திய அரசைக் கண்டிக்கும்வகையில் மது லிமாயி கொண்டுவந்த தீர்மானத்தின்மீது திரு. மனோகரன் பேசினார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு மாநிலத்து மக்களின் வட்டார உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அசாமில் நடந்த நிகழ்ச்சிகள், வட்டார உணர்வின் தன்மை சீரழிக்கப்பட்டதன் விளைவுகளாகும்.

"தமிழகத்தில் இந்திக்கு எதிராக நடைபெற்ற கிளர்ச்சிகளின்போது, அங்கு பிறமொழி பேசும் சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதப் பாதகமும் நேராமல் பாதுகாக்கப்பட்டுப் பத்திரமாக அங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

"இத்தகைய நல்லாட்சி நடத்திவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் துணைத் தலைமையமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய், சிவசேனையுடன் ஒப்பிட்டுப் பேசினார்.

மொரார்ஜி தேசாய் (குறுக்கிட்டு):—"நான் தெரிவித்த கருத்து கூச்சமின்றித் திரித்துக் கூறப்பட்டுள்ளது."

கி. மனோகரன்:— "நாட்டில் இப்போது நிலவிவரும் வன்முறைச் செயல்களையொட்டிய சோகக் கதை முழுமைக்கும் மத்திய அரசே வில்லனாகத் திகழ்ந்துவருகிறது!

"அரசியல் கண்ணோட்டம் எதுவுமின்றி பிரச்சினைக்குத் தீர்வு காண முயலவேண்டும்."

பெங்களூர்ப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது

பெங்களூர், பிப். 15—

"பெங்களூர்ப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட எல்லாக் கல்லூரிகளும் இன்றுமுதல் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கும்"

என்று செய்தியாளர்களிடம் துணைவேந்தர் அறிவித்தார்.

கல்லூரி முதல்வர்கள்—மாணவர்களின் பிரதிநிதிகள்—பெற்றோர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் நீண்டநேரம் விவாதித்த பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறிஞர் அண்ணா உடல் நிலை

சென்னை, பிப். 15—

வயிற்று வலி காரணமாக உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த புதன் கிழமையன்று சென்னை தலைமை மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உடல் நிலை தேறிவருகிறது.

மேலும் மூன்று நாட்கள் முழு ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு மருத்துவர்கள் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அண்ணா அவர்கள் நாளை (வெள்ளிக்கிழமை) மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு வரக்கூடும் என்று தெரிகிறது.

மேற்கு வங்கச் சட்டமன்றக் கூட்டவையில் அமளி!

தொடக்கவுரையாற்றவந்த ஆளுநர் இரு கோஷ்டிகளிடை சிக்கித் தவிப்பு

பலப் பரீட்சை நடைபெற இடமளிக்காமலே கூட்டத்தை ஒத்திவைத்தார் அவைத் தலைவர்

கல்கத்தா, பிப். 14—

மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் யாருக்கு ஆதரவு இருக்கிறது என்பதைக் கண்டறிய பலப் பரீட்சை நடத்த வாய்ப்புத் தராமலேயே மீண்டும் நாள் குறிப்பிடாமல் சட்டமன்றத்தைத் தள்ளிவைத்தார் அவைத் தலைவர் விஜய் குமார் பானர்ஜி; 'டிசம்பர் 29-ம் நாள் நான் அளித்த தீர்ப்பை மாற்றிக்கொள்வதற்கான காரணம் எதுவும் இல்லை' என்று அவர் கூறினார்.

அஜாய் முகர்ஜி தலைமையில் இருந்த கூட்டணி' அமைச்சரவையை ஆளுநர் நீக்கம் செய்தது செல்லாதது என்றும், டாக்டர் பி. சி. கோஷ் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவை சட்ட விரோதமானது என்றும் அவைத் தலைவர் நவம்பர் 29-ஆம் நாள் தீர்ப்பு அளித்து அவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தார்.

"இந்தத் தீர்ப்பை மாற்றிக் கொள்ளும்படி முடிவாக எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. எனவே அவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கிறேன்" என்று அவைத் தலைவர் கூறியதை, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

இதற்கு முன்னதாக இன்று பிற்பகல் 2-மணிக்குக் கூடிய சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் தர்மவீரா, வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரைத் துவக்கிவைத்தார்; இந்தக் கூட்டத்தில் இதுவரை கண்டிராத காட்சிகளும், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு முழக்கங்களும் காணப்பட்டன.

"இந்தியாவிலேயே இதுவரையில் வேறு எந்தச் சட்டமன்றத்திலும் இவ்வளவு சுருக்கமாகத் துவக்க உரை இருந்ததில்லை" என்று சொல்லும்அளவுக்கு, ஆளுநரின் உரை சிறியதாக இருந்தது; தம் கையிலிருந்த காகிதங்களிலிருந்து இரண்டொரு வரிகளைப் படித்துவிட்டு, அவர் கூட்டத் தொடரைத் துவக்கிவைத்தார்.

அவர் ஒரு நாற்காலியின்மீது ஏறி நின்றுகொண்டார். சுற்றிலும் காங்கிரசு உறுப்பினர்களும், மெய்க்காவலர்களும் நின்றுகொண்டு அவரை யாரும் நெருங்கவிடாதபடி காவலாய் அமைந்தனர்.

முக்கிய வாசலில் ஐ. மு. உறுப்பினர்கள் கறுப்புக் கொடிகளை ஆட்டிக்கொண்டு, 'தர்மவீராவே! திரும்பிப் போ!' என்று முழக்கமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆளுநர் அந்த வழியில் வராமல் பக்கவாட்டு வாயிற்படி வழியாக அவைக்குள் வந்துவிட்டார்.

அவையில் நிலவிய அமளியில், அவைத் தலைவர் விஜய்குமார் பானர்ஜியும், மேலவைத் தலைவர் டாக்டர் பி. சி. குகராயும் காணப்படவில்லை. முதலில் அவர்கள் ஆளுநரை, வரவேற்று அவையின் வாயிற்படிவரை உடன் வந்தனர்.

அவைக்குள் ஆளுநர் வந்திருப்பதைப் பார்த்ததும், ஐ. மு. உறுப்பினர்கள், அவைத் தலைவரின் மேடைக்கு விரைந்து சென்று, ஆளுநர்—அவைத் தலைவர்—மேலவைத் தலைவர் ஆகிய மூவருக்கும் போட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டனர்; சிலர் மேடைமீது நின்றுகொண்டு முழக்கம் எழுப்பினர்; காகிதங்களைத் தாறுமாறாக வீசி எறிந்தனர்!

அவைத் தலைவரின் செங்கோலை வைப்பதற்காக உள்ள தலையணையை ஓர் உறுப்பினர் ஆளுநரை நோக்கி வீசினார்; ஆனால் அது குறி தவறி மெய்க்காவலர் மீது விழுந்தது!

அதிகாரிகளுக்கான இடத்திலிருந்து ஆளுநருக்காக ஒரு நாற்காலி கொண்டுவரப்பட்டது;

(4-ம் பக்கம் பார்க்க)

சி. சுப்பிரமணியம்மீதான உரிமைப் பிரச்சினை

அவைத் தலைவர் தீர்ப்பு ஒத்திவைப்பு

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்மீதும், 'இந்து' பத்திரிகை மீதும் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் இளம்வழுதியால் கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினை மீதான தீர்ப்பை, எதிர்க் கட்சித் தலைவரும், அரசுக் கட்சித் தலைவரும் கோரியதற்கிணங்க 16-2-68 வரை ஒத்திவைத்தார் அவைத் தலைவர்.

'மொழித் தீர்மானத்தைத் திருத்த வேண்டும்'

ஆந்திர மாநிலச் சட்டமன்றத்தில் அரசுத் தரப்புத் தீர்மானம்

அனைத்திந்தியத் தேர்வுக்கு மும்மொழித் திட்டத்தை கட்டாயமாகச் செயல்படுத்தக் கோருகிறது

ஐதராபாத், பிப். 15—

"நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள மொழித் தீர்மானத்தினால், இந்தி பேசாத மாநில மக்களுக்குக் கடுமையான பாதகங்கள் ஏற்படும்; அந்தத் தீர்மானத்தைத் திருத்தவேண்டும்.

"அனைத்திந்திய சர்வீசுகளில் எல்லா மாநிலங்களுக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்; எல்லா மாநிலங்களிலும் மும்மொழித் திட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டும்; மத்திய அரசு உத்தியோகங்கள், அனைத்து இந்திய சர்வீசுகள், நியமனத்துக்கு மூன்று மொழிகளிலும் தேர்வு நடத்த வேண்டும்"

என்று ஆந்திரச் சட்டமன்றத்தில், அரசுத்தரப்பில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

முதலமைச்சரால் கூட்டப்பட்ட எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் நியமிக்கப்பட்ட மூவர் குழுவினரால் தயாரிக்கப்பட்ட இத்தீர்மானத்தை முதலமைச்சர் பிரும்மானந்த (ரெட்டி), சட்டமன்றத்தில் இன்று முன்மொழிந்தார்.

மத்திய அரசு உத்தியோகங்களிலும், அனைத்திந்திய சர்வீசுகளிலும் பிரதிநிதித்துவம் கிடைப்பது சம்பந்தமாக ஆந்திரம் உள்ளிட்ட சில மாநில மக்களிடை பெருங்கவலைக் காணப்படுவதாக இத்தீர்மானம் கூறுகிறது.

எந்தமொழிப் பிரிவினருக்காவது பாதக நிலை நீடிக்குமானால், மக்களின் நலனுக்குகந்த முறையில் தனது கொள்கையை அது வகுத்துக்கொள்ளலாமென்றும் இத்தீர்மானம் கூறுகிறது.

"இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தியைத் திணிக்க முயலக்கூடாது; ஆனால் அதே நேரத்தில், இந்தியாவின் ஒன்றுபட்ட கலாசாரத்தில் உள்ள எல்லா அம்சங்களையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு சாதனமாக அது பயன்படும் வகையில் அதை வளப்படுத்திப் பரப்ப முயலவேண்டும்" என்றும் இத்தீர்மானம் கூறுகிறது.

நம் நாடு
இரா.செழியன்
திருவள்ளுவராண்டு 1999 மாசி 3 (15—2—68) வியாழன்

வாய்ப்பளிக்காதீர்!

தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டு ஓராண்டுக்காலம் முற்றுப்பெற இன்னும் சில நாட்களே உள்ளன. இக்குறுகிய காலத்துக்குள்ளாகவே, 'சிறந்த முறையில் ஆட்சி புரிந்து வருகின்றனர்' என்ற பாராட்டுதலைப் பெற்றுவிட்டனர், கழகத்தவர்!

தமிழக அரசில், 'நாம்தான் என்றென்றும் ஆதிக்கம் செலுத்திவரப் போகிறோம்' என்ற ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியினருக்கு, தமிழக ஆட்சிப் பொறுப்பை முன்னேற்றக் கழகத்திடம் மக்கள் ஒப்படைத்துவிட்டதைக் கண்டதும் பெரும் ஏமாற்றமும், அதன் பலனாக ஆத்திரமும் பொங்கி வழிந்துகொண்டிருக்கிறது. 'எப்படியாவது கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும்' என முடிவு கட்டிக்கொண்டு, அதற்கான முயற்சிகளை நாள் தவருமல் கையாண்டு வருகின்றனர், காங்கிரசுத் தலைவர்கள்!

தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டவுடனே, சென்னை கடற்கரையில் நடைபெற்ற காங்கிரசுப் பொதுக் கூட்டத்தில், இன்றையத் தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகப் பதவி பெற்றிருக்கின்ற சுப்பிரமணியம், 'கிளர்ச்சி செய்து கழக ஆட்சியை விரட்டியடிப்போம்' என முழக்கமிட்டிருக்கின்ருர். அன்று தாம் முழக்கமிட்டதை, இன்று அக்கட்சியின் தலைவராக இருந்துகொண்டு சுப்பிரமணியம், நாள் தவருமல் தமிழகத்தில் குழப்பத்துக்கு விதை தூவிக்கொண்டு வருகின்ருர்!

ஆட்சிமொழித் திருத்தச் சட்டம்—அத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் விளைவாகத் தமிழக மாணவர்களுக்கு அதிருப்தி இருந்துவருகிறது. அந்த அதிருப்தியை முன்வைத்து, தமிழக மாணவர்களை இன்றையத் தமிழக அரசுக்கு எதிராகக் கிளப்பிவிட சுப்பிரமணியமும், காமராசரும், 'மாணவர் மாநாடுகள்' என்ற பெயரில் காங்கிரசுக் கூட்டங்களைக் கூட்டி, முழுமூச்சாக முயன்றனர்!

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்துக்கு எதிராக மாணவர்களைக் கிளர்ச்சியில் ஈடுபட வைத்து—அக்கிளர்ச்சியை ஒரு திரையாக ஆக்கிக்கொண்டு—காங்கிரசுக் குண்டர்களைக்கொண்டு நாசவேலைகளைச் செய்யலாம்; அப்பொழுது கழக அரசு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடக்கூடும்; அந்த அடக்குமுறையில் மாணவர்களில் சிலர் பலியாகக்கூடும்; இதை ஒரு புகலாகக்கொண்டு, 'கழக ஆட்சியில் மாணவர்கள் தாக்கப்படுகின்றனர்; துப்பாக்கியால் சுடப்படுகின்றனர்; அடக்குமுறை தர்பார் நடத்துகிறது கழக அரசு' என்ற கூக்குரலை எழுப்பிக் கழக அரசைத் தூற்றித் திரியலாம்; பொதுமக்களைக் கழக அரசின்மீது அதிருப்திகொள்ளச் செய்யலாம்—என்றெல்லாம் சுப்பிரமணியமும், காமராசரும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தனர்.

ஆனல், அவர்களின் நினைப்பு ஈடேறவில்லை. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானம், தமிழக அரசின் மொழிக் கொள்கையைத் தெளிவுபடுத்திவிட்டது. தங்கள் கருத்துக்கும்—தமிழக அரசின் கருத்துக்கும் முரண்பாடு துளியும் இல்லை என்ற பேருண்மையை, மாணவர்கள் நன்கு உணர்ந்துகொண்டனர். மாணவர்களுக்காக சுப்பிரமணியமும், காமராசரும் சிந்திய கண்ணீரின் போலித்தன்மையை மாணவர்கள் உணர்ந்து கொண்டதுடன், 'நாடாளுமன்ற மொழித் தீர்மானத்துக்கு எதிராகக் கிளர்ச்சியை மேற்கொள்ள வேண்டும்' எனத் தாங்கள் ஏற்கனவே செய்திருந்த முடிவையும் மாற்றிக் கொண்டனர்.

தாங்கள் போட்டிருந்த சதித் திட்டத்தைத் தங்கள் முடிவால் தகர்த்தெறிந்துவிட்ட மாணவர்கள் மீது, சுப்பிரமணியத்திற்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது; மாணவர்களை இழித்துப் பழித்துப் பேச முனைந்தார்.

சுப்பிரமணியம் தங்களை ஏசியதைக் கண்டதும், இளைஞராக உள்ள மாணவர்கள் சீறி எழுந்தனர்.

பத்தாண்டுக்காலம் தமிழக அமைச்சராகவும், ஐந்தாண்டுக் காலம் மத்திய அமைச்சராகவும் பணி புரிந்து, வாலிபத் துடிப்பையும் கடந்துவந்திருக்கின்ற சுப்பிரமணியம் அவர்களாலேயே ஆத்திரத்தை அடக்க முடியவில்லை என்ருல், இளமைத் துடிப்புடன் இருக்கின்ற மாணவர்களிடம் அதை எதிர்பார்க்க முடியுமா?

தங்களைப் பற்றி இழிவாகப் பேசியதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரி, சுப்பிரமணியம் போகின்ற ஊர்களிலெல்லாம் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடுபடலாயினர். மாணவர்களின் இந்தக் கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர் சமூக விரோதிகள்! மாணவர்களுடன் மாணவர்களாகக் கலந்துகொண்டு கல்லெறிந்து திருவிளையாடல்களை மேற்கொண்டுள்ள கயவர்கள் யார் என்ற உண்மையை, தங்கள் அனுபவத்தால் நாட்டு மக்கள் அறிந்தே உள்ளனர்.

இந்த நிலையில், மாணவர்களைக் குறித்துத் தாம் இழிவாக எதையும் கூறவில்லை என்றும், அப்படித் தாம் கூறியது தங்கள் மனத்தைப் புண்படுத்தி இருப்பதாக மாணவர்கள் கருதும்பட்சத்தில், தாம் கூறியவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதாகவும் சுப்பிரமணியம், இப்பொழுது வெளிப்படையாக அறிவித்துள்ளார். இதை அறிவித்த அதே நேரத்தில், மாணவர்களைப் பற்றிக் கூறியவற்றைத் திரும்பப்பெற்றுக்கொள்ளுவதாகத் தாம் அறிவித்ததை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டையும், செய்தித் தாள்கள் மீது சுப்பிரமணியம் சுமத்தியுள்ளார்.

மாணவர்களில் பலர் கோரியபடியே, மாணவர்களைக் குறித்துத் தாம் கூறியவற்றை சுப்பிரமணியம் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டார்; இந்த உண்மையை, அவரே அறிவித்திருக்கின்ருர்.

சுப்பிரமணியம் அவர்களின் அறிவிப்பு, மாணவர்கள் அனைவருக்கும் திருப்தி அளித்திருக்கும்; எனவே, அவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுதல்—'திரும்பிப் போ' என முழங்குதல் போன்ற ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுவதை மாணவர்கள் கைவிட வேண்டும்.

மாணவர்கள், இனியும் பள்ளிகளுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது விரும்பத்தக்கதல்ல—அது நியாயமுமல்ல.

மாணவர்களைப் பற்றித் தாம் கூறியதை, மாணவர்களின் விருப்பப்படி திரும்பப் பெற்றுக்கொண்ட செய்தியை, பேச்சோடு பேச்சாகக் காங்கிரசுக் கூட்டத்தில் தெரிவித்த சுப்பிரமணியம், மாணவர்களின் உள்ளத்தைத் தாக்கிய சுடுசொல்லைத் தாம் திரும்பப் பெற்றுக்கொண்ட செய்தியை, தனி அறிக்கையாகச் செய்தித் தாள்களுக்குக் கொடுத்திருக்க வேண்டியதுதான் முறையாகும். அத்தகைய முக்கியமான அறிக்கையை செய்தித் தாள்கள் வெளியிடாமலிருப்பதற்கும் நியாயமில்லை; இது. சுப்பிரமணியத்தைப் போன்ற அனுபவம் மிக்கவர்களுக்கு, பிறர் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

தாம் திரும்பப் பெற்றுக்கொண்ட செய்தியை அறிக்கையாகச் சுப்பிரமணியம் ஏற்கனவே கொடுத்திருக்கும்பட்சத்தில், தாம் போகின்ற இடங்களிலெல்லாம் மாணவர்களின் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைச் சந்தித்திருக்கவேண்டிய நிலையே உருவெடுத்திருக்காது. தம் மனம்போன போக்கில், இன்றையக் கழக அரசைக் தங்கு தடையில்லாமல் தாக்கிப் பேசுவதற்குச் சுப்பிரமணியம் அவர்களுக்கு நல்ல வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

நடந்தது நடந்துவிட்டது; இனியாவது, மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு, தம் சொல்லாலும் செயலாலும் வாய்ப்பளிக்காமல் இருக்கும்படி, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களை, மிகப் பணிவோடு வேண்டிக் கொள்ளுகிறோம்.

—கா. க.

சென்னைக்குக் காவிரி நீர் கொணரும் தமிழக அரசின் திட்டம்

அக்டோபர் 30-ம் நாளே வேலை தொடங்கிவிட்டது

சட்டமன்ற மேலவையில் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 13—

"வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரை சென்னைக்குக் கொண்டு வருவது என்று தீர்மானிக்கப்பட்டு, திட்டம் சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் நாள் தொடங்கப்பட்டுவிட்டது"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சட்டமன்ற மேலவைக் கேள்வி நேரத்தின்போது கூறினர்.

என். ஆர். தியாகராசன்:—"இந்தத் திட்டம் நிறைவேறினல், காவிரி நீர்ப்பாசனம் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கூறினர்களா? அதுபற்றி பரிசீலிக்கப்பட்டதா?"

அமைச்சர்:—"இந்தத் திட்டத்தினல் கொள்ளிடப் பகுதியில் பாசனத்திற்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாது என்று அந்தப் பகுதி விவசாய மக்கள் முன்னிலையில் விளக்கம் கூறப்பட்டு அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

"ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்குக் காவிரி நீர் கொண்டுவரும் திட்டம் பற்றியும், வீராணத்திலிருந்து சென்னைக்குக் காவிரி நீர் கொண்டு வரும் திட்டம் பற்றியும் ஆராய்ந்து பார்க்கப்பட்டது; ஜேடர்பாளையத்திலிருந்து கொண்டுவருவதானல் சுமார் ரூ 42 கோடி செலவாகிறது; வீராணம் திட்டத்திற்கு ரூ 24 கோடிக்குக் குறைவாகவே ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

"ஜேடர்பாளையம் திட்டத்தை நிறைவேற்றவேண்டியிருந்தால் 6,558 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது; அதற்காக ரூ. 260 இலட்சம் கொடுக்க வேண்டியிருக்கும்.

"வீராணம் திட்டத்திற்கு 400 ஏக்கர் நிலம்தான் ஆர்ஜிதம் செய்ய வேண்டியவேண்டும்; இதற்கு ரூ. 8 இலட்சம்தான் கொடுக்கவேண்டும்; இதனல்தான், ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்பட்டு வீராணம் திட்டம் மேற்கொள்ளப்பட்டது."

எம். எத்திராசுலு:— "வீராணம் திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது வழியில் உள்ள ஊர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படுமா?"

அமைச்சர்:— "இது பற்றிப் பரிசீலிக்கப்படும்."

எதிர்க் கட்சியும் எதிர்க் கட்சிகளும்

சட்டமன்றத்தில் சுவையான வாதம்!

சென்னை, பிப். 14—

சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் உரிமைபற்றிய சுவையான விவாதம் நடைபெற்றது.

ஆளுநர் உரையின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொள்ள எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைத் தலைவர் அறிவித்ததும். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் எழுந்து,

"எதிர்க் கட்சி என்பது எங்கள் கட்சி ஒன்றுதான்; மற்றக் கட்சிகளெல்லாம் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவைதாம்; 'ஐக்கிய முன்னணி' என்ற அடிப்படையில் அவர்களெல்லாம் ஆளுங் கட்சி ஆதரவாளர்களே யாவர்; ஆகையினல், எங்கள் கட்சிக்குத் தேவையான நேரத்தை ஒதுக்கிவிட்டு எஞ்சிய நேரத்தை மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் கொடுப்பதுதான் முறை"

என்று கூறினர்.

உடன், சுதந்தராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹண்டே எழுந்து, திரு. கருத்திருமன் கூறியது சரியல்ல என்றும், ஆளும் கட்சியை ஆதரித்து வாக்களிப்பதாலேயே ஒரு கட்சி ஆளுங் கட்சியைச் சேர்ந்ததாகிவிடாது என்றும், காங்கிரசுக் கட்சியேகூட ஆளுங் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கும் நிலை வரலாம் என்றும், அப்படி வாக்களிப்பதால், 'எதிர்க் கட்சியல்ல' என்ருகிவிடாது என்றும் கூறினர்.

திரு. பி. ஜி. கருத்திருமன் மீண்டும் எழுந்து, 'மற்றக் கட்சியினரெல்லாம் விளம்பரத்துக்காகப் பேசத்தான் உரிமை கொண்டாடுகிருர்களே தவிர, எதிர்க் கட்சியினராக விளங்கவில்லை' என்றும், தாம் சார்ந்துள்ள கட்சியே எதிர்க் கட்சி என்றும் வாதாடினர்.

உடனே கழக உறுப்பினர் திரு. ஏ. பி. ஆசைத்தம்பி எழுந்து, 'உறுப்பினர்கள் விளம்பரத்துக்காகப் பேசுகிருர்கள்' என்று கூறியதை எதிர்த்தார்; 'அந்தப் பகுதியை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிடவேண்டும்' என்று கோரினர்.

மேலும் பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவிக்க முனைந்தனர்.

"'விளம்பரம்' என்ற சொல், முறைகேடானதல்ல என்பதால் அதை நீக்கத் தேவையில்லை" என்ருர் அவைத் தலைவர்.

இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர்களும், பி. சோ. கட்சி உறுப்பினர்களும் தாங்கள் எதிர்க் கட்சிகளாகத்தான் இயங்குவதாகவும், தேர்தல் நேரத்தில் உடன்பாடு செய்துகொண்டதால் ஆளுங் கட்சியாகத் தங்களை வர்ணிப்பது கூடாது என்றும் கூறினர்.

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எழுந்து கூறியதாவது:—

"நாங்களெல்லாம் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தாம்; ஆனல், 'எதிரிக் கட்சி'யாக இருக்க விரும்பவில்லை.

"ஆளுங் கட்சியை ஆதரித்து வாககளிப்பவர்கள் அனைவரும் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ருல், 'நடுநிலை' வகித்தவர்களுக்கு என்ன பெயர்? (அவையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது).

"இந்த ஆட்சி ஏற்பட்டு ஓராண்டுதான் ஆகிறது. இந்த ஓராண்டுக் காலத்தில் நாங்கள் ஆளுங் கட்சிக்கு ஆதரவாகவே வாக்களித்து வந்திருக்கிறோம் என்ருல், 'அந்த அளவுக்கு இந்த ஆட்சி நல்ல முறையில் நடந்துவருகிறது' என்று பொருளே தவிர, நாங்கள் ஓட்டுப் போடுவதாக 'அடிமை ஒப்பந்தம்' எழுதிக் கொடுத்துவிட்டுவந்திருப்பவர்கள் அல்லர்!"

அமைச்சர் கருணாநிதி அவர்கள் எழுந்து, கருத்தறிவித்ததாவது:—

"பேசுவதற்கான நேரம் ஒதுக்குவதுபற்றி இங்கே பேசுவதில் பயனில்லை; இதற்கென்றே அலுவல் பரிந்துரைக் குழு இருக்கிறது; அந்தக் குழுக் கூட்டத்தில் அந்தந்தக் கட்சியினரும் தங்கள் கருத்தைக் கூறி ஆவன செய்துகொள்ளலாம்."

அவை முன்னவரான அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுந்து கருத்தறிவித்ததாவது:—

"எதிர்க் கட்சித் தலைவரும், முதலமைச்சரும் பேசுவதற்குரிய நேரம் வரையறுக்கப்படவில்லை; அவர்கள், தேவையான நேரத்தை எடுத்துக்கொள்வது மரபாக இருந்துவருகிறது. மற்றவர்கள் பேசுவதற்குரிய நேரம், அந்தந்தக் கட்சியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே ஒதுக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, ஆளுங் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் கூடப் போதாதுதான். இதில் கட்சிக் கண்ணேட்டம் எதுவுமில்லை..."

கருத்திருமன்:—"நான், 'எங்கள் கட்சி பிரதான எதிர்க் கட்சி' என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இப்படிக் கூறினேன். எங்கள் கட்சி பிரதான எதிர்க் கட்சியாக இருப்பதால், 'அதிக நேரம் ஒதுக்கவேண்டும்' என்றுதான் கோரினேன்."

அவைத் தலைவர்:—"நான், எதிர்க் கட்சி என்ற சொல்லையே பயன்படுத்தவில்லையே; பொதுவாக அந்தந்தக் கட்சியின் பெயரைத்தான் குறிப்பிட்டேன்; இதில் எந்தவிதமான விவாதத்துக்கும் இடமில்லை; நேரம் ஒதுக்குவது பற்றி அலுவல் பரிந்துரைக் குழுவில் பேசிக்கொள்ளலாம்."

தமிழக அரசு மீது மத்திய அமைச்சர் பழி

இரா.செழியன் எதிர்ப்புக்குப்பின் மழுப்பல் விளக்கம்

புதுடில்லி, பிப். 13—

"தமிழகத்திலும், கேரளத்திலும் மொழிக் கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது, அந்த இரு அரசுகளும் எவரையும் கைது செய்யவில்லை"

என்று, மக்களவையில் இரயில்வே அமைச்சர் புனச்சா குற்றஞ்சாட்டும் அளவில் கூறியபோது, கழக உறுப்பினர் இரா. செழியனும், கேரள உறுப்பினர் ஸ்ரீதரனும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"அமைச்சரின் அறிக்கை 'நம்பத்தகாததாக'வும், 'கற்பனையானதாக'வும் இருக்கிறது; எந்த ஆதாரத்தைக் கொண்டு இந்த முடிவுக்கு அமைச்சர் வந்தார்?" என்று ஸ்ரீதரன் கேட்டார்.

"மொழிக் கிளர்ச்சியின்போது சென்னையில் இரு அமைச்சர்கள் இரயில்வே நிலையத்திற்குச் சென்று, இரயில்வே சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்காமலிருககுமாறு கேட்டுக்கொண்டது உண்மை இல்லையா?"

என்று திரு. இரா. செழியன் கேட்டார்.

குற்றஞ்சாட்டவில்லையாம்

"தி. மு. கழக அமைச்சர்கள், இரயில்வே நிலையத்திற்குச் சென்றது உண்மைதான்; ஆனால், அவர்கள் அங்கு செல்வதற்கு முன்பே சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது"

என்று கூறிய இரயில்வே அமைச்சர், தாம் அவ்வாறு கூறியதற்கு விளக்கம் தந்திருப்பதாவது :—

"நம்பத்தகாத அல்லது கற்பனையான அறிக்கையை நான் வெளியிடவில்லை; 'மொழிக் கிளர்ச்சியின்போது சட்டம் — அமைதியைப் பாதுகாக்க மாநில அரசுகள் ஒத்துழைக்கவில்லையா?' எனக் கேட்கப்பட்ட கேள்விக்கே நான் அவ்வாறு பதில் சொன்னேன்."

அச்சுறுத்தலா?

மற்றும் சில கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"மொழிக் கிளர்ச்சிகள் நடைபெற்றபோது, இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதற்காக, சம்பந்தப்பட்ட மாநிலங்களிடமிருந்து நட்ட ஈடு வாங்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது."

மறைந்த உறுப்பினர்களுக்கு சட்டமன்றம் இரங்கல்

சென்னை, பிப். 12—

இன்று காலை தமிழகச் சட்டமன்றக் கூட்டம் தொடங்கியதும், சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்களான ஆரணி துரைசாமி ரெட்டியார், செஞ்சி ஜெங்கால் ரெட்டியார் ஆகியோர் மறைவு குறித்து இரங்கல் தெரிவிக்கும் வகையில், உறுப்பினர் அனைவரும் ஒரு நிமிட நேரம் அமைதியாக எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர்.

மேலவையில் :

சட்டமன்ற மேலவை இன்று கூடியதும், மேலவை உறுப்பினர் திரு. ஜெங்கால் ரெட்டியார் மறைவு குறித்து இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அவரது பணிகளைப் பாராட்டி' இரங்கல் தெரிவிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணாவும், எதிர்க் கட்சித் தலைவர் கே. இராமசாமி நாயுடுவும் பேசினர்.

அவர் மறைவை முன்னிட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ஒத்திவைப்பதற்குமுன், முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அனைவரும் எழுந்து ஒரு நிமிட நேரம் அமைதியாக நின்று மரியாதை தெரிவித்தனர்.

குழந்தைகள் உணவுக் கட்டுப்பாடு

அறவே நீக்கிவிட அரசு ஆய்வு

சென்னை, பிப். 12—

"குழந்தைகள் உணவுமீது தற்போதுள்ள ஓரளவு கட்டுப்பாட்டையும் நீக்கிவிடுவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது"

என உணவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறியதாவது :—

"இப்போது உற்பத்தியில் 20 சதவிகிதத்தைத்தான் அரசு வாங்கி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகித்து வருகிறது; எஞ்சிய 80 சதவிகிதத்தை தனிப்பட்ட வியாபாரிகளே விற்பனை செய்துவருகின்றனர்; இந்த 80 சதவிகித விற்பனையில் தவறுகள் நடக்க வழி இருக்கிறது; எனவே, இருக்கின்ற ஓரளவு கட்டுப்பாட்டையும் நீக்கிவிட சிவில் சப்ளை கூட்டுறவு ஆணையர் பரிந்துரைத்திருக்கிறார்; அதனை அரசு ஆராய்ந்துவருகிறது."

கேரளத்திலும் இந்தி ஒழிக்கப்படுமா?

மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவது சந்தேகம்!

முதலமைச்சர் நம்பூதிரிபாடு சூசக அறிவிப்பு

சென்னை, பிப். 13—

"மொழித் துறையில் அண்மையில் ஏற்பட்டுள்ள சம்பவங்களைப் பார்க்கும்போது, மும்மொழித் திட்டம் நடைமுறையில் இயலக்கூடியதா-செயல்படுத்தப்படக்கூடியதா என்ற சந்தேகம் தோன்றுகிறது"

என்று கேரள முதலமைச்சர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு, நிருபர்களின் கூட்டத்தில் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

"ஒருசமயத்தில் மும்மொழித் திட்டத்தை நான் ஆதரித்தேன்; ஆனால் ஆட்சிமொழிச் சட்டமும்-தீர்மானமும் புதிய நிலவரத்தைத் தோற்றுவித்துவிட்டன; இந்நிலையில் மும்மொழித் திட்டம் செயல்படுமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.

"கேரளக் கல்வி நிலையங்களில் இந்தி கட்டாயப் பாடமாக நீடிக்குமா?"

என்று கேட்டபோது அவர் குறிப்பிட்டதாவது :—

"தற்போது இந்தி கட்டாயப் பாடமாக இருக்கிறது; பின்னர் என்ன நேருமென்பதை என்னால் கூறுவதற்கில்லை."

நாடாளுமன்ற மேலவை

தி. மு. கழக உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடும்

வருகிற ஏப்ரல் மாதம் 2-ம் நாளுடன் நாடாளுமன்ற மேலவையில் பல உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவதையொட்டி, தமிழகச் சட்டமன்றத்தின் மூலம் ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் இப்பொழுது தி. மு. கழகம் பெரும்பான்மை பெற்றிருப்பதால் நாடாளுமன்ற மேலவையில் தி. மு. கழக எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கான ஆறு இடங்களில் தி.மு. கழகத்துக்கும், அதன் ஆதரவு பெற்ற கூட்டணிக்கும் ஐந்து இடங்கள் கிடைக்கும்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

பிப். 15, 16 : சிவகாசி வட்டம்; 18 : கோவில்பட்டி; 19 : ஒட்டநத்தம்; 20 : நடுவிக்கோட்டை; 21 : தாராபுரம்; 22 : பசுபதிபாளையம்; 23 : சத்திரக்குடி; 24 : அனுப்பானடி; 25 : சுரண்டை; 27 : மதுரை.

மாநில அரசு ஊழியர்கள்

பஞ்சப் படியை உயர்த்த

மொரார்ஜி தேசாயின் முட்டுக்கட்டை!

புதுடில்லி, பிப். 14—

"கிராக்கிப் படி போன்ற ஊதிய இனங்களுக்காக மாநில அரசு செய்யும் செலவை மத்திய அரசால் பகிர்ந்துகொள்ள முடியாது"

என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மாநில அரசுக்கு ரிசர்வ் பாங்கி அளிக்கும் அதிகப் பற்றுகளை நிறுத்திவிடப்போவதாகவும் அவர் கூறினார்.

"மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப் படியை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கவோ அல்லது கிராக்கிப் படியை வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் பிணைக்கவோ போவதில்லை" என்றும் மொரார்ஜி கூறினார்.

"விலைவாசிகள் இறங்க நல்ல வாய்ப்பு இருப்பதால், கிராக்கிப் படியை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை" என்றார்.

சரமாரியான கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மொரார்ஜி மேலும் கூறியதாவது :—

"விலைவாசி நிலவரத்துக்கு மத்திய அரசை மட்டுமே முழுக்க முழுக்கப் பொறுப்பாளியாக்க முடியாது. மாநில அரசின் கொள்கைகள், பண்டங்களுக்குள்ள கிராக்கி—அவற்றின் விநியோக நிலைமை ஆகிய அம்சங்களும் விலைவாசியைப் பாதிப்பவைகளாகும்.

கிராக்கிப் படிச் செலவுக்காக மாநிலங்களுக்கு மத்திய அரசு உதவினால், இதர உதவிகளுக்கு அதனிடம் பணமிராது."

சென்னையில் ஆட்டோ--ரிக்ஷாக்கள் எண்ணிக்கை

'அதிகரிக்கப்பட மாட்டாது' என அமைச்சர் அறிவிப்பு

"சென்னை நகரில் தற்போது 199 ஆட்டோ-ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது; இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை"

என்று சட்டமன்றத்தில், பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் பல துணைக் கேள்விகட்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"சென்னை நகருக்குத் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை ஆட்டோ-ரிக்ஷாக்களே போதும் என்றும், இனிமேல் அனுமதிக்க வேண்டாம் என்றும் காவல் துறையினர் தெரிவித்த பரிந்துரையை முந்திய அரசு ஏற்றுக்கொண்டது; அதனையே இந்த அரசும் பின்பற்ற முடிவு செய்திருக்கிறது."

ஆட்டோ-ரிக்ஷாக்களை அதிகப்படுத்தவேண்டாம் என்பதற்குக் காவல் துறையினர் பின்வரும் காரணங்களைக் கூறியிருக்கின்றனர் :—

"ஆட்டோ-ரிக்ஷாவில் பயணம் செய்வது பயணிகளுக்கும் வசதியாக இல்லை; சில நெருக்கடியான இடங்களில் திடீரெனத் திருப்புவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன; ஓடும்போது கடுமையான இரைச்சலும், அளவுக்குமீறிய புகையும் ஏற்படுவதால் பயணிகள் உடல் நலனைப் பாதிக்கிறது; தானே இயங்கும் 'சிக்னல்'களைக் கடக்கும்போது வேகமாகச் செல்ல முடிவதில்லை" — மேற்சொன்ன காரணங்களால், ஆட்டோ-ரிக்ஷாக்களை அதிகரிக்கும் எண்ணம் இல்லை.

"வெளியூர்களில் ஆட்டோ-ரிக்ஷாக்களை அதிகரிக்கக் கோரி விண்ணப்பம் வந்தால் கவனிக்கப்படும்."

தீக்குளித்த தியாகச் செம்மல்களின் நினைவு நாள் விழா

திருவுருவப் படங்களைத் திறந்துவைத்தார் அமைச்சர் மு. கருணாநிதி

சென்னை, பிப். 12—

செந்தமிழ் காக்க இந்தியை எதிர்த்துச் செந்தீக்குத் தம் இன்னுயிரீந்த கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன் ஆகிய இருவரின் நான்காம் ஆண்டு நினைவு நாள், இன்று சென்னை 92-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் கொண்டாடப்பட்டது.

கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில், வட்டச் செயலாளர் தோழர் செ. கண்ணப்பன் தலைமையில் நடந்த இந்த விழாவில், பொதுப் பணியமைச்சர் திரு. மு கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு, சிவலிங்கம்—அரங்கநாதன் திருஉருவப் படங்களைத் திறந்துவைத்து அவர்களின் தியாகத்தையும் உணர்ச்சியையும் பாராட்டி உருக்கமானதோர் உரையாற்றினார்.

மற்றும் தோழர்கள் காஞ்சி மணிமொழியார் எம். கோபால் எம்.எல்.ஏ., துணை மேயர் பவளவண்ணன், சா. கணேசன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., ஏ. எஸ். இராமன் எம்.சி., மா. செங்குட்டுவன், சோ. கி. மூர்த்தி, க. துரை, வி.பி. அகிலன், புலியூர் இராதா, ஆகியோரும் பேசினர்.

ஊழல் புரிந்த முன்னாள் அமைச்சருக்கு புதுப் பதவி!

காங்கிரசுக்குள்ளேயே எதிர்ப்பு

புதுடில்லி, பிப். 14—

ராஞ்சியில் அரசினர் பொறுப்பில் உள்ள பெரும் தொழில் நிறுவனம் ஒன்றின் தலைவர் பதவியை காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இடதுசாரித் தலைவரான கே.டி. மாளவியாவுக்கு அளிப்பது பற்றி மத்திய அமைச்சரவை ஆலோசித்து வருகிறதாம்.

காங்கிரசுக் கட்சியில் இடதுசாரி மனப்பான்மை கொண்ட தலைவர்களின் பொறுப்பில் அரசினர் நிறுவனங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய அமைச்சரவை இவ்வாறு ஆலோசனை செய்கிறதாம்.

ஆனால், கே. டி. மாளவியாவுக்கு ஒரு பெரிய அரசினர் நிறுவனத்தின் தலைவர் பதவி வழங்கப்படுவதற்குக் காங்கிரசுக் கட்சியிலேயே பெரும் அளவுக்கு எதிர்ப்பு இருந்துவருகிறது; மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், 'மாளவியாவுக்கு அப்பதவியைத் தரக்கூடாது' என்று வற்புறுத்தி வருகின்றனராம்.

மாளவியா முன்பு மத்திய எண்ணெய் வள அமைச்சராகப் பதவி வகித்ததும், அப்போது அவர் மீதும் அவரது செயலாளர்கள் மீதும் ஊழல் குற்றஞ்சாட்டப்பட்டு அதன் காரணமாக அவர் பதவி விலகியதும் நினைவிருக்கலாம்.

"மாளவியா, தம்மீது சாட்டப்பட்ட ஊழல் குற்றங்களுக்குச் சரியான சமாதானம் எதுவும் கூறவில்லை; எனவே, அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் வகிக்க அவர் தகுதிவாய்ந்தவரல்லர்" என்ற கருத்து பெரும்பாலானவர்களிடையே இருந்துவருகிறது; இதன் அடிப்படையிலேயே அவருக்குப் பதவி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

ஆளுநர் உரை மீதான விவாதம்

கட்சிகளுக்கு ஒதுக்கிய நேரம்

சென்னை, பிப். 14—

சட்டமன்றத்தில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்ற ஒவ்வொரு கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம், அவைத் தலைவர் இன்று அறிவித்தவாறு வருமாறு :—

தி.மு.க.—7 மணி; காங்கிரசு—4 மணி; சுதந்தரா—2 மணி; இடது கம்யூனிஸ்டு—1 மணி; (பிற கட்சிகளுக்கான நேரம் குறிப்பிடப்படவில்லை).

சிறுவர்கள் புகைப் பிடிப்பதைத் தடுக்கவழி

'சட்டத்தால் முடியாது' என அமைச்சர் கருத்து

சென்னை, பிப். 12—

"சிறுவர்கள் புகை பிடிப்பதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க ஆய்வு மேற்கொண்டுள்ளதா?"

என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு சட்ட அமைச்சர் திரு. மாதவன், 'இல்லை' என்று பதிலளித்தார்.

அவர் மேலும் கேள்விகட்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

"சிறுவர் புகை பிடிப்பதைத் தடுக்க 1958-ஆம் ஆண்டிலேயே யோசிக்கப்பட்டு பிறகு, அதனால் பலன் ஏற்படாது என்று கருதி முயற்சி கைவிடப்பட்டது.

"சமுதாயத்தில் நிலவும் இத்தகைய தீய பழக்கங்களை ஒழிக்கச் சட்டத்தால் முடியாது; மனமாற்றமடையச் செய்வதன் மூலமே ஒழிக்க முடியும்.

"புகைபிடிப்பது நல்லதா கெட்டதா என்ற ஆராய்ச்சியே இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

"பொதுவாகப் புகைபிடிப்பதைத் தடுப்பது என்பது ஒரு சில குறிப்பிட்ட இடங்களில்தான் முடியும். பிரசாரத்தின் மூலமே இதனைத் தடுக்கலாம். அதிகாரிகளைக் கொண்டு தடுப்பது என்பது இயலாத காரியம்.

"சிறுவர்களுக்கு சிகரெட், பீடி வகைகளை விற்கக்கூடாது என்று கடைக்காரர்களைத் தடுக்கவும் முடியாது; ஏனெனில், தந்தைக்காக மகன் சென்று வாங்கி வருவதும் உண்டு."

கல்லூரிகளில் மாற்று வேலை நேரம்

அரசு ஆராய்வதாக அமைச்சர் தகவல்

சென்னை, பிப். 20—

"நடப்பு ஆண்டில் கல்லூரிகளில் இருந்த 48,000 இடங்கள், 56,000 இடங்களாக அதிகரிக்கப்பட்டது; அடுத்த ஆண்டு இடநெருக்கடி மிகுந்தால் மாற்று நேர முறை (ஷிப்டு) ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்"

என்று சட்டமன்றத்தில், கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

கேள்வி நேரத்தின்போது மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"இடநெருக்கடி என்பது கல்லூரியையும், பாடங்களையும் பொறுத்ததாகும். நடப்பு ஆண்டில் வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலம் நிலைமையைச் சமாளித்தோம். இனி வருகிற ஆண்டில் எங்கெல்லாம் மாற்று முறையைக் கொண்டுவரலாம் என்று ஆராயப்பட்டுவருகிறது."

ஊர்வலம்- கூட்டங்கள் ஆகியவைகளுக்குக் கட்டுப்பாடு!

அமைதி காக்க சென்னைக் காவல்துறை ஏற்பாடு

சென்னை, பிப். 15—

சென்னை நகர எல்லைக்குள் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை முறைப்படுத்தும் நோக்கத்துடன் நேற்று நள்ளிரவு முதல் 10 நாட்களுக்கு நகரப் போலீசுச் சட்டம் 41-வது பிரிவு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

"கோவையில் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளையடுத்து இங்குள்ள வேறுபட்ட அரசியல் கட்சிகளிடையே பதட்டநிலை இருந்துவருவதாகத் தெரியவருவதாலும், அமைதியின்மை வளருவதாகத் தெரிவதாலும், இவை வன்முறையில் கொண்டுபோய் விடும் என்று தெரிவதாலும், பொது அமைதிக்குப் பங்கம் நேரக்கூடுமென்று நினைப்பதாலும், நகரப் போலீசுச் சட்டம் 41-வது பிரிவின்கீழ் கூட்டம்—ஊர்வலம்—ஆர்ப்பாட்டம் ஆகியவை நடத்துவதைத் தடை செய்து உத்தரவிடுகிறேன்"

என்று நகரக் காவல்துறை ஆணையர் திரு. பி. குப்புசாமி தமது பிரகடனத்தில் கூறியிருக்கிறார்.

காவல்துறை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பெற்றுள்ள காவல்துறையின் பிற உயர் அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து தனி அனுமதி பெற்று நடத்தப்படுகிற கூட்டங்களை இந்த உத்தரவு பாதிக்காது.

"இதேபோல், மதச் சார்புள்ள கூட்டங்கள்—விளையாட்டுப் பந்தயங்கள்—திருமண நிகழ்ச்சிகள்—திருமணத்தையொட்டிய ஊர்வலம்—மற்றும் அரசுத் துறையினர் நடத்தும் கூட்டங்கள்—ஆகியவை, தடையுத்தரவால் பாதிக்கப்படமாட்டா" என்றும் காவல்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

"17—2—68 பிற்பகல் 2-மணியளவில் திருச்சி மாவட்டப் பிரதிநிதிகள்கூட்டம், நகராட்சி சத்திரத்தில் நடைபெறும்; அதுபோது, பல பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும், அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் **அன்பில் தர்மலிங்கம்** அறிவிக்கிருர்.

மே. வங்க சட்டமன்றக் கூட்டவையில் அமளி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதன்மீது அவர் ஏறுவதற்குமுன்னல் இரு பக்கங்களிலிருந்தும் காங்கிரசுக் கோஷ்டிக்கும்—ஐ.மு. கோஷ்டிக்குமிடையில் அகப்பட்டுக்கொண்டு திணறினர்! நிருபர்களிருந்த இடத்திலிருந்து அவரைச் சிறிது நேரம் பார்க்கக்கூட முடியவில்லை!

எதிர்க் கட்சி உறுப்பினர்கள், ஆளுநர் இருக்குமிடத்துக்கு முண்டியடித்து வரப் பார்த்தார்கள்; கவர்னருக்கு முன்னல் காங்கிரசு உறுப்பினர்கள் நெருக்கமாக நின்றுகொண்டு, அவர்கள் நெருங்காதபடி தடுத்துக்கொண்டிருந்தனர்! ஆளுநர் தமது உரையைப் படித்தபோது ஐ. மு. உறுப்பினர்களின் கூச்சல் உச்சத்தை எட்டியது!

அதிகாரிகளின் பகுதிக்கும்—அமைச்சர்களின் இருக்கைகளுக்குமிடையிலுள்ள நடைபாதையில் ஆளுநர் நின்றுகொண்டிருந்தார்!

ஆளுநரின் சுருக்கமான உரையை முடிந்தவுடனேயே, வடமேற்கு வாசல் வழியாக அவரைத் துணையுடன் கூட்டிச் சென்றுவிட்டார்கள். அதன்பின் முதலமைச்சரும் போய்விட்டார்!

நடக்க இருப்பவை

16--2--68

திருவில்லிபுத்தூர்

6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திருவண்ணமலை சாலையில் (ஆத்துக்குள்); தலைவர்: சு. சோமசுந்தரம் எம்.சி; பேசுவோர்: ஆ. திராவிடமணி, ச. அமுதன் பி.ஏ., ஆர்.கே. துரை நாரணன், எஸ். டி. கொழுந்து, அ. தர்மர், மற்றும் பலர்.

நாச்சியார்கோயில் — திருநறையூர்

தி.மு.க. கிளைகள் சார்பில் மாலை 6 மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர்: எம். பன்னீர்செல்வம்; பேசுவோர்: வழக்கறிஞர் எஸ். கோதண்டராமன், சு. பத்மநாபன், அ. சர்புதீன், மு. இசுமத் பாட்சா, மற்றும் பலர். (இரவு 8 மணிக்கு மணி–சாமி முழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

ஆலங்குடி

தி.மா.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கடைவீதி அருகில்; தலைவர்: உரு. தங்கராசு; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ந. சாமிநாதன், ஏ.பி. செல்வம் பி.ஏ., கோ. கல்யாணசுந்தரம், கோ. மீனாட்சிசுந்தரம், அ. தட்சணமூர்த்தி, நா. முருகேசன், மற்றும் பலர்.

17--2--68

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு முல்லா சாகிப் தெருவில் (டி.டி.வி. உயர்நிலைப் பள்ளி அருகில்); தலைவர்: வி.எல்.செயராமன்; பேசுவோர்: மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., பெ. சீனிவாசன் ;எம்.எல்.ஏ., பண்ருட்டி இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எம்.ஆர்.கண்ணன் எம்.எல்.ஏ., என். வி. என். சோமு பி.ஏ., பி.எல்., ஆர். கே. சாந்துலால், எம்.ஆர்.சந்திரன், லோகநாதன்.

மிலட்டூர்

எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா; மாலை 6-மணிக்கு; தலைவர்: துரை. இராசப்பா; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ந. சாமிநாதன்.

குடியேற்றம்

13-வது வட்ட பொற்செழியன் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு செதுக்கரையில்; தலைவர்: சி. துரைசாமி, மற்றும் பலர்.

கலைக் குழு முகவரி

மதுரை கண்ணம்மா - தங்கராசு குழுவினரின், 'பூத்தது பொற்காலம்' என்னும் கலை நிகழ்ச்சி நடத்த விழைவோர் தொடர்பு கொள்கை :—

பொ. தங்கராசு,
33, லெட்சுமிபுரம், 7-வது தெரு,
மதுரை-1.

காங்கிரசு இதழுக்கு மன்னிப்பு எச்சரிக்கை

கழகச் சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

'சிங்க முரசு' என்ற காங்கிரசுப் பத்திரிகையின் ஆசிரியர் சி.பி. கனகசபை, மற்றும் இருவர் மீது மேல் மலையனூர் தொகுதி தி.மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முனுசாமி, இ.பி. கோ. 500, 501 பிரிவுகளின்படி தொடுத்திருந்த வழக்கில் விழுப்புரம் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. சி.வி. இரங்கநாதன், 'எதிரிகள் மூவரும் குற்றவாளிகள் எனக் கருதி—எதிரிகள் கொடுத்த நிபந்தனையற்ற மன்னிப்பை ஏற்றுக்கொண்டு எச்சரித்துத் தீர்ப்புக் கூறினர்.

கனகசபையும் மற்றும் இருவரும் 1—12—67-ல் 'சிங்க முரசு' இதழில் ஆர்.ஆர். முனுசாமி அவர்களைக் குறித்து எழுதியது முழுவதும் தவருனது என மனு தாக்கல் செய்யப்பட்டது; அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது; விசாரணைக்குப் பின் மேற்கண்டவாறு தீர்ப்புக் கூறப்பட்டது.

கழக எம்.எல்.ஏ.சார்பில் திண்டிவனம் வழக்கறிஞர் டி.ஏ.எஸ். பாலன் வழக்கை நடத்தினர்.

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

என்ன இருந்தாலும், காங்கிரசுக்கு, 'ஒரு எதிர்க் கட்சியாக இயங்குவது எப்படி என்பது தெரியவில்லை' என்ற ஒரு பரவலான குற்றச்சாட்டு தமிழக அரசியலில் இருப்பதானது, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்களை மிகவும் உறுத்தியிருக்க வேண்டும்.

"சட்டமன்றத்தில் காங்கிரசு மட்டுமே ஓர் எதிர்க் கட்சியாக இருக்கிறது; எனவே அதற்கு இன்னும் அதிகப்படியான நேரம் ஒதுக்கியாக வேண்டும்" என அவர் கேட்டிருக்கிருர்! 'கட்சிக்கு, நேரத்தையாவது சம்பாதித்துக் கொடுப்போமே' என்ற எண்ணம் போலும்! அதற்காக அவர், 'காங்கிரசு மட்டும்தான் தமிழகச் சட்டமன்றத்தில் உள்ள ஒரே எதிர்க் கட்சி' என முடிவுகட்டிப் பேசியிருக்க வேண்டும்!

இருந்தாலும், அதுவும் ஒரு வகையில், பொது நன்மையாகவே முடிந்திருக்கிறது!

எப்படியெனில், கருத்திருமன் இந்தக் கோரிக்கையை எழுப்பவில்லையென்ருல், உடன் சுதந்தரக் கட்சியும், மார்க்சீய கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும் எழுந்து நின்று, 'எங்களை ஆளும்கட்சியைச் சேர்ந்த கூட்டணி அமைப்புகளாகவே கருதிவிட வேண்டாம்; சமயம் நேரும்போது கழகத்தை எதிர்த்தும் வாக்கு அளித்திருக்கிருேம்—வாக்கு அளிப்போம்' என்ற ஒரு விளக்கத்தைத் தந்திருக்கமுடியுமா?

"எதிர்த்தும்—ஆதரித்தும் இயங்கினல்தான் கட்சிகளைப் பாகுபடுத்தி விடுகிறீர்கள்; குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் நடுநிலையாகவே உள்ள கட்சியினை எந்தப் பெயர் கொண்டு விளக்குவீர்கள்?" என, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் குறுக்கிட்டுக் கேட்டிருப்பது, சுவையுள்ள இடையீடாகும்!

"கழகம் நீங்கிய மற்ற எல்லா கட்சிகளுமே, ஏதோ ஒரு வகையில்—எப்போதோ ஒரு தடவையிலேனும் எதிர்க் கட்சிகளாக இயங்கி இருக்கின்றன" என அவை முன்னவர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இறுதி விளக்கம் தந்திருப்பது, 'கருத்திருமனின் கோரிக்கையே தவறு' என நிரூபித்திருக்கிறது.

கதர் அணிந்தவர்களெல்லாம் காங்கிரசுக்காரர்களல்லர்! காங்கிரசுக்காரர்களெல்லாம் கதர் அணிவதும் இல்லை!

கழகம் ஆட்சிக்கு வந்தபின், இந்த உண்மை மென்மேலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது!

"கதரை ஒரு கட்சியின் சின்னமாகக் குறுக்கிய குற்றச்சாட்டுக்கு ஆளாகும் காங்கிரசாட்சியைவிட, கழக நிர்வாகத்தில்தான் ஓராண்டுக் காலத்தில் ரூ. 15 இலட்சம் அதிக விற்பனையைக் கதர் பெற்றிருக்கிறது"

என்ற உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி அவர்களின் கேள்விநேர பதில், காங்கிரசுக்காரர்களின் உள்ளங்களைத் துணுக்குறச் செய்திருக்குமென்பதில் ஐயமில்லை!

இதற்கு மேலும் மெருகு தரும் வகையில், நேற்றைய கேள்வி நேரத்தின்போது சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் கதருடையில் வந்திருப்பதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிவித்திருப்பது, 'காங்கிரசு—கதர்' என்ற இரண்டுக்கும் இதுவரையில் இருந்துவந்த உறவு முறைகளில் புதிய நிலைகள் தோன்றியிருப்பதைக் காட்டுகிறது!

★

'ஆவடி—புவனேசுவரம்' என்று ஊர் ஊராகச் சோஷலிசத்தைச் சுமந்து வந்து விளம்பரப் படுத்திய காங்கிரசின் சொந்தக்காரர்கள், 'கழக நிர்வாகம் வந்தபின், 106 பஸ் தடங்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன' என்ற பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணநிதி **அவர்களின் அறிவிப்பை அடுத்து, 'சொல்லில் சோஷலிசம்' என்ற புதிய 'பிராண்'டுக்கு மட்டும் உரிமையாளர்களாகிருர்கள்!**

சுதந்தரத்துக்குப்பின், 'சோஷலிசம்' என்ற சொல் அதிகமாகப் புகுந்து வெளிவந்தது, காங்கிரசுக்காரர்களின் வாய்களிலிருந்து மட்டும்தான்—அதுவும், பல பெயர்களில்!

அப்படிச் சொல்லளவில் மட்டுமே அவர்கள் சோஷலிசவாதிகளாக இருந்தமையால், அவர்களது பாணிக்கு, 'சொல்லில் சோஷலிசம்' என்ற புதுப் பெயரினைத் தரலாம்! ஆவடி—புவனேசுவரத்தை அடுத்து, இதுவும் ஒருவகையாக அது அமையலாம்!

இருபது ஆண்டுக் காலம் ஆட்சியிலிருந்தவர்களால் முடியாத ஒரு சோஷலிச நடவடிக்கையை, கழக நிர்வாகம் ஒரே ஆண்டுக்குள் முடித்திருப்பதனை, அமைச்சர் கருணநிதியின் புள்ளிவிவரம் எடுத்துக்காட்டுகிறது.

தேசியமயமாக்கும் நடவடிக்கையில் கழக நிர்வாகத்தின் கொள்கைபற்றி இருந்துவரும் ஒரு வதந்திக்கும், கேள்வி நேரத்தில் அமைச்சர் தந்த விளக்கம் தக்க பதிலாக அமைந்திருக்கிறது.

"டி.வி.எஸ். நிறுவனத்தினரின் தடங்களை இதுவரை தேசியமயமாக்காதது கழகத்தின் அச்சம் அல்லது தயவுப் போக்கு" என்று மேடைப் பிரச்சாரங்களில் ஈடுபடும் காங்கிரசுக்காரர்கள், இனியாவது, 'டி.வி.எஸ். பஸ்களை 1972-வரை தேசியமயமாக்க முடியாத வகையில் ரூட்களை வழங்கிவிட்டுச் சென்றிருப்பது தங்கள் ஆட்சிதான்' என்பதை உணருவார்களாக!

★

கவர்னர் பேருரைமீது மூன்றும் நாள் விவாதமான நேற்றும், கழக உறுப்பினர் ஐவர் கருத்துரையாற்றியிருக்கின்றனர்.

'மாணவப் பருவத்திலிருந்து நேராகச் சட்டமன்ற உறுப்பினராக மாறியவர்' என்ற முறையில், பி. மலைச்சாமி, பிப்ரவரி 23-ந் தேதிய சட்டமன்றத் தீர்மானம்பற்றி தந்துள்ள விளக்கம் பாராட்டப்படும் வகையில் இருக்கிறது—

"இந்தி எதிர்ப்புத் தீர்மானம் மாணவர்களுக்குப் பயந்து கொண்டுவரப்பட்டதல்ல—மானத்துக்குப் பயந்து கொண்டுவரப்பட்டது"

என்று அவர் கூறியிருப்பது, அடுக்கு மொழிச் சிறப்பு மட்டுமல்ல—உண்மை நிலையைத்தான் அத்துணை அழகுபட எடுத்துரைத்திருக்கிருர்!

"தமிழர்களின் மானங் காக்கும் அந்தத் தீர்மானம், தமிழகத்துக் காங்கிரசுக்காரர்களின் மானத்தைக் காப்பதற்காகவும்தான்" என்பதனை அவர்கள் உணரவேண்டும்!

"பிரிவினைக்கு வித்தூன்றுவோர், வடக்கே உள்ள மொழி வெறியர்கள்தாம்" என்ற கருத்து, **எம். சின்னசாமி** பேச்சின் மையப் புள்ளியாக இருக்கிறது!

கவர்னர் பேருரையில் விவசாயத் துறைக்குத் தரப்பட்டிருக்கும் முக்கியத்துவம், **டி. பொன்னுமலை** அவர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது!

"கழக அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றியுள்ள மொழித் தீர்மானம்போல், மொழிப் பிரச்சினையில் காங்கிரசுக் கட்சியும் ஒரு தெளிவான கொள்கைத் தீர்மானத்தினை உருவாக்க முடியுமா?", எனக் கேட்டிருக்கிருர், **ஆர். ஆர். முனுசாமி.**

நிர்வாகப் பொறுப்பு இல்லாமல், அரசியல் கட்சியாக மட்டும் இயங்கும் தமிழகத்துக் காங்கிரசுக்காரர்களுக்கு இது சுலபத்தில் முடியும் என்பது அவரது எண்ணம்—அனைவரது கருத்து; ஆனல், அது காங்கிரசுக்காரர்களுக்கு இந்த நாள் வரையில், இயலாத ஒன்ருகத்தானே இருந்துவருகிறது!

கன்னியாகுமரிப் பகுதி பற்றிய காங்கிரசு உறுப்பினர்களின் கட்டுப்பாடான தவருன பேச்சுக்களுக்கு **எம். சி. பாலன்** தக்க விளக்கம் தந்துள்ளார்—

"அரிசி கிடைப்பதும் அந்தப் பகுதியில் சீர்திருந்தியிருக்கிறது; கழகத்துக்காரர்கள் அன்ருட நிர்வாகங்களில் தலையிடுவதாகக் கூறப்படுவதும் அவதூறேதவிர, வேருென்றும் இல்லை"

என அவர் விளக்கி, தொகுதிக்கு மட்டுமன்றி கழகக் கடமையும் ஆற்றியிருக்கிருர்!

★

மேலவையில்....

'சனநாயகம்'—'இந்திய ஒற்றுமை' ஆகிய இரண்டும்தான் இந்திய அரசியலில் இன்றையப் பெரும் பிரச்சினைகளாகிவிட்டிருக்கின்றன! அவை இரண்டினையும் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பு எவ்வாறு மத்திய அரசிடம் இருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்டி உரையாற்றியிருக்கின்றனர் — **சி. பி. சிற்றரசு, சி. வி. இராசகோபால்** ஆகிய இருவரும்!

"'இந்தி மட்டும்' என்ற ஏகாதிபத்தியக் கொள்கை இந்தியாவைப் பிளக்கும்" என எச்சரித்திருக்கிருர்—சி. வி. இராசகோபால்!

மொழித் துறையில் சனநாயகப் பண்பு காக்கப்பட வேண்டுமானல், பதினன்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக்கப்பட வேண்டும்" என்ற கழகக் கொள்கைக்குப் பரந்த பொருளிலும் விளக்கம் தந்திருக்கிருர்—சி. பி. சிற்றரசு!

"காங்கிரசுக்காரர்கள், சோஷலிசவாதிகளாகவும் இல்லை—காந்தியவாதிகளாகவும் இல்லை". என்பதனைஎடுத்துக்காட்டிப் பேசியிருக்கிருர் இரா, வெங்கடாசலம், மதுவிலக்குக் கொள்கையில் கழக நிர்வாகம் பெற்றிருக்கும் சிறப்புப் பட்டயம் பற்றியும், புதிய அரசு போக்குவரத்துத் துறையில் ஆற்றும் சோஷலிசப் பணிகள் குறித்தும் பாராட்டியிருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.